5. தம்மை பேரவை வளாகத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 3 உறுப்பினர்கள் அவதூறாகப் பேசி அடிக்க வந்ததாக உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீனும் தம்மை வெளியிலிருக்கிற ஒரு தலைவர் சில ஆட்கள் மூலம் மிரட்டுவதாக உறுப்பினர் திருமதி லோகாம்பாளும் கொடுத்துள்ள புகார்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 11-ஆம் தேதி அன்று, எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் வெளிநடப்பு செய்துவிட்டு, லாபிலிருந்து கன்னா பின்னா என்று பேசிக்கொண்டிருந்தார்கள், முதலமைச்சரையும், அரசையும் பற்றி, அப்போது நான் அந்தப் பக்கமாக வெளியே போவதற்காக சென்று கொண்டிருந்தேன். உடனே பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் திண்டிவனம் பன்னீர்செல்வமும், பாலகிருஷ்ணன் அவர்களும் நேராக என்னிடம் வந்து, மூவருமாக அடிக்க வந்து ஒருவிதமான கெட்ட வார்த்தையால் என்னையும் முதலமைச்சர் அவர்களையும் பேசினார்கள். நான் அதைத் தங்களிடம் எனக்கு நியாயம் வழங்கவேண்டுமென்று கேட்டு, உங்களுக்கு எழுதியிருக்கிறேன். எனக்கு நியாயம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அந்த வார்த்தையை நான் என் ஜென்மத்தில் கேட்டதே இல்லை. யாரும் அப்படி என்னைச் சொன்னதும் இல்லை. இதுதான் முதல் தட்வை. ஆகையினால் கண்டிப்பாக உங்களை நியாயம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் என்னிடத்தில் வந்து அந்தப் புகாரைச் சொன்னவுடன் பண்பாடு மிக்க யாரும் செய்யமுடியாத அல்லது பேசக் கூடாத சில காரியங்களை அந்த 2, 3 உறுப்பினர்கள் செய்தார்கள் என்றே நான் கருதி, அதன்மீது உரிய வகையிலே சில நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டுமென்று கருதி, சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் பிரதான எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் என்கிற வகையில், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பொறுப்புணர்வோடு, அதிலே ஏதாவது நடவடிக்கை எடுப்பார் தன்னுடைய கட்சி உறுப்பினர்கள் மீது என்று, எதிர்கட்சி தலைவருக்கே அந்தப் புகார் மனுவை அப்படியே அனுப்பினேன். இது வரையிலேயும் அவரிடத்திலே இருந்து நான் நடவடிக்கை எடுக்கிறேன். எங்களுடைய கட்சி உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துகிறேன். இப்படிப் பேசியிருந்தால் தவறு, அவர்கள் மன்னிப்பு கேட்பார்கள் என்பது போல தெரிவித்து எந்தப் பதிலும் வரவில்லை. ஆனால் அப்படி முறைகேடாக திருமதி

ஜீனத் சர்புதீன் அவர்களிடத்திலே நடந்துகொண்ட உறுப்பினர்களுக்காக வக்காலத்து வாங்கி இன்றைக்கு வெளியே போய் உண்ணாவிரதம் இருக்கிறார்களே தவிர, உண்மையிலேயே இதிலே உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என்று சொன்னால் திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் தான், இவர்கள் நடந்து கொண்ட முறையைக் கண்டித்து உண்ணாவிரதம் இருந்திருக்க வேண்டும். அந்த அளவுக்கு முறைகேடாக நடந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பொறுப்புள்ள எதிர்க்கட்சி தலைவரையே நான் கேட்டு இப்போது ஒரு வாரம் ஆகிறது. அன்றைகே நான் அவருக்குக் கடிதம் அனுப்பினேன். இதுவரையிலேயும் எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. எனவே தொடர்ந்து இதை ஒரு அவை உரிமை மீறல் பிரச்சினை என்று கொடுக்காமல் நேரிடையாக என்னை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட காரணத்தால் இவ்வாறு செய்திருக்கிறேன். இதை ஒரு உறுப்பினருடைய உரிமையை, தன்மானத்தைப் பாதிக்கிற வகையில் அவர்கள் நடந்துகொண்ட செயலாகக் கருதி அதற்கு உரிய வகையில் நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. செல்வராஜ்.

நண்பகல் 12.00

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற வளாகத்திற்கு உட்பட்ட எல்லா இடமும் மாண்புமிகு பேரவைத் தலைவருடைய கட்டுப்பாட்டிற்குள் உள்ள இடமாகும். இங்கே எந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினராக இருந்தாலும் சரி, அவர்களுக்கு ஏதாவது ஒரு பிரச்சினை எழுகிறபோது அதிலே நீதி வழங்க வேண்டியது உங்களுடைய கடமை என்ற காரணத்தால், இன்றைக்கு ஒரு பெண் உறுப்பினர் என்றும் பாராமல் தகாத வார்த்தையைப் பேசியதோடு மீண்டும் அவருக்குத் தொடர்ந்து தொல்லைகள் கொடுக்கிற விதத்தில் அவர்கள் பேசி வருகிறார்கள். நீங்கள் உரிமைக் குழுவிற்கு இந்தப் பிரச்சினையை அனுப்பி இந்தப் பிரச்சினையில் அவர்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை உரிய வகையில் உரிமைப் பிரச்சினையாக அவர்கள் என்னிடத்திலே கொடுப்பார்களேயானால் அதை நான் உரிமைப் பிரச்சினையாக எடுத்து உரிய நடவடிக்கை எடுப்பேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் தெரிவித்ததைப்போல மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் புகார்

மனுவாக இல்லாமல் உரிமைப்பிரச்சினையாக இந்த அவையிலே கொண்டு வந்தால், அதை இந்த அவை கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது மட்டும் அல்ல. இன்னொரு பெண் உறுப்பினர் திருமதி லோகாம்பாள் அவர்களும் எனக்கு ஒரு புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். வெளியிலே இருக்கிற ஒரு தலைவர் சில ஆட்கள் மூலம் தன்னை மிரட்டுவதாக அவரும் ஒரு புகார் கொடுத்திருக்கிறார். அவரே கூட அவைக்கு வர முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது, இந்த மிரட்டலும் அதற்குப் பின்னணியாக இருக்குமோ என்றும் கருத வேண்டியிருக்கிறது. அந்த உறுப்பினருடைய புகார் மனுவையும் உரிமைப் பிரச்சினையாகவே கூட எடுக்கத் தக்க வகையிலேதான் இருக்கிறது. எனவே அந்தப் பிரச்சினையோடு கூட திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் தெரிவித்து இருப்பதைப் போல உரிமைப் பிரச்சினையாகவே எடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த இரண்டையும் உரிய வகையில் எனக்கு உரிமைப் பிரச்சினையாக அவர்கள் கொடுக்கிறபோது விதிமுறைகளின்படி உரிமைப் பிரச்சினையாக எடுத்து இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அரசினர் தனித் தீர்மானம்

'தமிழீழ விடுதலைப்புலி இயக்கம்' "ஒரு சட்டபுறம்பான அமைப்பு" என்ற தடையாணையை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்க இந்திய அரசைக் கோருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித்தீர்மானம். தமிழீழ விடுதலைப் புலி இயக்கம் ஒரு சட்டப்புறம்பான அமைப்பு என மேலும் 2 ஆண்டுகளுக்கு தடையாணை விதிக்க மத்திய சட்டமான, சட்டப்புறம்பான நடவடிக்கைகள் தடுப்புச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க மத்திய அரசை வற்புறுத்தும் அரசினர் தனித்தீர்மானம். மாண்புமிகு முதல் அமைச்சர்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை தீவில் செயல்பட்டு வந்த, விடுதலைப் புலிகளின் அமைப்பைச் சேர்ந்தவர்கள், அந்நாட்டில் ஏற்பட்ட இனப் பிரச்சினை, மற்றும் படுகொலைகளைத் தொடர்ந்து, இந்திய நாட்டிற்குள் குறிப்பாக தமிழகத்திற்குள், ஊடுருவ ஆரம்பித்தனர்.